# நியாயங்கள் மாறும்போது



பூங்கொடி பதிப்பகம்

## லக்ஷ்மி

# நியாயங்கள் மாறும்போது...

மாதர் விடுதலை சங்கத்தில் நடந்ததொரு கூட்டத்திற்குப் போய்விட்டு அப்பொழுதுதான் வீட்டிற்குள் நுழைந்தேன். வீடு அமைதியில் மூழ்கிக் கிடந்தது. முன்னறையில் அப்பா அறைத் தூக்கத்தில் நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தார். வரதட்சிணையைப் பற்றிக் கூட்டத்தில் காரசாரமாக சாடிய கல்லூரி மாணவி ஒருத்தியின் பேச்சு என் நெஞ்சிலும் நெருப்பை மூட்டி விட்டிருந்தது. ஆவேசமாக வீட்டுக்குள் நுழைந்த என் கண்களில், கட்டி வைக்கப்பட்ட பெட்டி, படுக்கை, மூட்டைகள் தென்பட்டன. தலை தீபாவளி கொண்டாட வந்து டேரா போட்டுவிட்ட அக்காவும் அவள் கணவரும் காலையில் சொன்னபடி மாலை ரயிலுக்குப் பயணப்படவில்லை என்று புரிந்து கொண்டேன்.

''அவா எல்லாரும் சினிமாவுக்கு போயிருக்கா — பசிச்சா எடுத்துப் போட்டுண்டு சாப்பிடச் சொன்னா.'' அப்பாவின் முணுமுணுப்பு எரிச்சலை மேலாக்கியது.

வீட்டுச் செலவுக்குப் பணம் போதவில்லை என்று அம்மா அன்று காலையில் என்னிடம் ஐம்பது ரூபாய் வாங்கிக் கொண்டது சினிமாவுக்குச் செலவழிக்கவா? அப்பா கொட்டிக் கொடுத்த வரதட்சிணை, சீர் இதெல்லாம் போதாது போல நான் பாடுபட்டு சம்பாதித்த காசில் சினிமா பார்க்கப் புறப் பட்டிருந்த அக்கா, அத்திம்பேர் இருவரையும் எண்ணிக் கொதித்துப் போனேன். அவர்களுக்குச் சரியாகத் தாளம் போட்டுக் குழைந்து குனிந்து கும்பிடு போட்டுக் கொண்டு தன்னைத் துரும்பாக்கிக் கொண்ட அம்மாவை நினைத்து ஆத்திரப்படாதிருக்க முடியவில்லை.

சமையலறை மேடையிலிருந்த பாத்திரங்களில் ஒன்றை மெல்லத் திறந்து பார்த்தேன். சாயங்கால டிபனுக்கு மாப்பிள்ளைக்காக அம்மா செய்திருந்த சொஜ்ஜியில் மீதி கொஞ்சம் நெய்யில் மிதந்து கொண்டிருந்தது.

இன்னும் எத்தனை நாள் அக்கா இங்கே தங்கப் போகிறாளோ? எத்தனைக் கிலோ சர்க்கரையும் நெய்யும் பாழாகப் போகிறதோ—? பற்களைக் கடித்துக் கொண்டு குடத்து நீரைத் தம்ளரில் சரித்து வேகமாகக் குடித்தேன். கட்டுக் கொள்ளாத கோபத்துடன் படுக்கையில் போய் விழுந்தேன். அம்மாவும் அவர்களும் வீடு திரும்பி வந்தது, சாப்பிடும் போது உள்ளேயிருந்து எழுந்த பேச்சு, சிரிப்பு... சமையலறையில் அம்மா தன்னந்தனியே பாத்திரங்களை ஒழுங்கு செய்யத் தடுமாறிக் கொண்டிருந்தது — எல்லாம் காதுகளில் விழத்தான் செய்தன.

வேண்டுமென்றே மனத்தை இரும்பாக்கிக் கொண்டு உதவி செய்ய எழுந்திருக்காது படுத்துக் கிடந்தேன்.

முன்னறைக் கடிகாரம் பத்தடித்து ஓய்ந்த போது அம்மா அறைக்குள் வருவது தெரிந்தது. விடி விளக்கைப் போட்டு விட்டு என் கட்டிலின் அருகே தரைமீது அவள் பாயை விரித்துக் கொள்வதை அரைக் கண்ணால் பார்த்தேன். அக்காவும் அத்திம்பேரும் அவர்களது படுக்கையறையை ஆக்கிரமித்துக் கொண்டு விட்டதால் அப்பா முன்னறையிலும் அம்மா என் அறையிலும் முடங்கிக் கொள்ள நேர்ந்தது.

லேசாக இருமிக் கொண்டு அப்பா அறையின் வாசலில் நிற்பதை உணர்ந்தேன். ''சியாமளி குட்டி தூங்கி விட்டாளா?'' — அப்பா கேட்டதும் கண்களை இன்னும் இறுக்கமாக மூடிக் கொண்டேன்.

''பால் சாப்பிடக்கூட எழுந்திருக்கலை.''



''பாவம், குழந்தைக்கு அசதி. நாள் முழுவதும் வேலை செய்கிறாளே –'' அநுதாபப்பட்ட அப்பா உள்ளே வந்து படுக்கையின் விளிம்பிலே உட்கார்ந்து கொண்டார்.

''உன்கிட்டே ஒரு சங்கதி சொல்லணும்னு ரெண்டு நாளா துடிச்சிண்டிருக்கேன். பண்டிகை அமர்க்களத்திலே முடியலை'' – அப்பா ஆரம்பித்தார். ''அசந்துதான் தூங்கறா சியாமளி –'' சொல்லிக் கொண்டே பரீட்சை பார்ப்பது போல அம்மா மெல்ல என் தோளைத் தட்டினாள். நான் கட்டையாக அசையாது கிடந்தேன். நெஞ்சு மட்டும் படபடவென்று வேகமாக அடித்துக் கொண்டது.

''முந்தா நாள் காத்தாலே – சிந்தாதிரிப்பேட்டைக்குப் போயிருந்தேன். என் ஆபீஸில் புதுசா வேலைக்குச் சேர்ந் திருக்கிற குமாரசாமி அங்கே லோகநாதன் தெருவில் முப்பத் தெட்டாம் நம்பரில் வீடு எடுத்திருக்கிறதாகச் சொன்னான். வெறும் ஒரு வார்த்தைக்காவது ஏதாவது உதவி வேணுமான்னு விசாரிக்கப் போயிருந்தேன். சாமான்களை லாரியிலிருந்து ஆட்கள் இறக்கி வச்சுட்டுக் கூலி வாங்க வாசலில் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்திலே அவனைப் பார்த்தபோது தூக்கி வாரிப்போட்டுடுத்து எனக்கு... நல்ல வேளை, அவன் பார்க்கவில்லை.''

''என்ன சொல்றேள்?'' பதறிய அம்மா என் தலை மாட்டில் கட்டிலின்மீது இடித்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

''நம்ப சுந்தரை அந்தக் கூட்டத்திலே பார்த்தேன். தாடியும் மீசையுமா, அழுக்கு வேஷ்டியும் கந்தல் பனியனுமா உன் மச்சினன் படுகிழவனாகி விட்டிருக்கான். எடுபிடி ஆளாக அவாளோடகூட நின்னுண்டு இருந்தான்.''

''ஐயையோ! நாம இங்கே இருக்கறது அவனுக்குத் தெரிஞ்சுடப் போறது.''

''நான் சட்டுனு அவன் கண்களில் படாம உள்ளே போயிட்டேன். பிறகு விசாரித்தபோது குமாரசாமி சொன்னான். 'அவன் வீட்டுக்கு எதிரே மாடி அறையிலே குடியிருக்கானாம். தெருக் கோடியிலிருக்கும் சின்ன ஹோட்டலில் எடுபிடி ஆளா வேலை பார்க்கிறானாம். ஒழிஞ்சபோது கூப்பிட்டக் குரலுக்கு வந்து ஏதாவது செஞ்சு கொடுத்துட்டுக் கூலி வாங்கிக் கிறானாம். பார்த்தா பிச்சைக்காரனைப்போல இருக்கான். ஆனால் பேசினால் பெரிய மனுஷா வீட்டுப் பிள்ளைபோல தெரியறது. பாவம், என்ன கஷ்டமோ'ன்னு குமாரசாமி உருகிப் போனான். உனக்குத்தான் உன் மச்சினனைப் பத்தித் தெரியுமே! மத்தவா முன்னாலே பெரிய ஜெண்ட்டில்மனாக நடந்துப்பானே!''

என் நெஞ்சு திக்திக்கென்று தீவிரமாக அடித்துக் கொண்டது. சித்தப்பா சுந்தர் சென்னையிலா இருக்கார்? சென்னைப் பட்டினம் அம்மாவுக்குச் சொந்தம் போலச் பேசறாளே! பேஷ்! - கோபத்துடன் உதட்டைக் கடித்துக் கொண்டேன் - சின்ன வயதில் சித்தப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டு மீனாட்சி கோயிலுக்கு எத்தனை முறை போயிருக்கிறேன். குச்சி மிட்டாயை வாங்கிக் கொடுத்து விட்டு - குளப் படியில் அருகே உட்கார வைத்துக் கொண்டு குண்டோதரன் கதையைச் சொல்லி, எத்தனை முறை என்னைச் சிரிச்க வைத்திருக்கிறார் சித்தப்பா!

அவர் இப்போது... எடுபிடி ஆளாக... இதே சென்னை யில் ஒரு மூலையில் இருக்கிறார். இங்கே அம்மா நெய் மிதக்கும் சொஜ்ஜியைக் கிண்டி நேத்துவரை அந்நியனாக இருந்துட்டு வரதட்சிணையை வாங்கிக் கொட்டிக் கொண்டு மாப்பிள்ளை உறவோடு உள்ளே வந்திருக்கிறவனுக்கு உபசாரம் பண்றாள்... இது எந்த நியாயத்தில் சேர்த்தி? துயரமும் கோபமும் மூண்டு கொண்டு நெஞ்சை அடைத்தன.



கண் இமைகளை நீர் சுட்டது. மூச்சை அடக்கிக் கொண்டு எல்லாவற்றையும் ஊன்றிக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

''மாப்பிள்ளை ஊருக்குப்போற வரைக்கும் நீங்க அந்தப் பக்கம் போகாதீங்க...''

''அவன் நம்மைத் தேடிண்டு வரத்துக்கு சந்தர்ப்பமே யில்லையே! ஏன் பயப்படறே?''

''ஏன் இல்லை? நான் மதுரையிலிருந்து இங்கே மாத்திண்டு வந்திருக்கிறது தெரிஞ்சா அடுத்த நிமிஷமே வந்து நிற்பானே உங்க தம்பி. என் மாமியாரின் நகைகளில் அவன் பங்கு நம்பகிட்டதானே இருக்கு! தங்கம் விக்கிற விலைக்கு ஐம்பதாயிரம் பெறுமே. அவன் ஒரேயடியாக ஒழிஞ்சுட் டான்னு நினைச்சு அதிலே பாதியை எடுத்து மூத்தவளுக்குப் போட்டுக் கல்யாணத்தை ஒப்பேத்திட்டோம். மீதியை சியாமளிக்கு வச்சிருக்கோம். இப்போ 'அதையெல்லாம் கொண்டா'ன்னு வந்து கலாட்டா பண்ணினா...? சங்கதி தெரியாத மாப்பிள்ளை முன்னால் எல்லாம் அம்பலமாகிடுமே? என் மச்சினன் கையாடல் கேஸ் ஒண்ணில சிக்கி ஜெயிலுக்குப் போனவன்னு பெருமையா சொல்லிக்க முடியுமா...?''

பொங்கி எழுந்த கோபத்தை அடக்க முடியாது நான் லேசாகப் புரண்டு படுத்தேன்.

சித்தப்பா கையாடல் செய்த குற்றவாளி என்று துச்ச மாகப் பேசும் அம்மா இப்போது என்ன செய்திருக்கிறாள்?

'சித்தப்பாவின் சொத்தை எடுத்துத் தன் இரு மகளுக்கும் பங்கிட்டு விட்டிருக்கிறாள். வீட்டுக்கு வெளியே இதைச் செய்தால் கையாடல் குற்றம். வீட்டுக்குள்ளேயே செய்தால் அண்ணன் தம்பிகளின் விவகாரம். நியாயம் எப்படித்தான் இவர்கள் பார்வையில் மாறி விடுகிறது?' எனக்குள் வெகுண்டேன்.

''கவலைப்படாதே – எதுக்கும் உனக்குத் தெரிஞ்சிருக் கட்டும்னு சொல்லி வைச்சேன்,'' அப்பா அலுப்புடன் எழுந்து வெளியே செல்வது கேட்டது.

''ஈஸ்வரா இந்தக் கடங்காரன் ஒழிஞ்சான்னு ஸ்நானம் பண்ணிட்டு மறந்துட்டு இருக்கறச்சே – இப்படி சமயத்துக்கு வந்து கழுத்தறுக்கப் புறப்பட்டிருக்கானே பாவி...'' அம்மா தனக்குள் முனகியபடி பாயில் சாய்ந்து கொண்டாள்.

'அம்மா! எல்லாம் நீ செஞ்ச சதியின் விளைவு. தாய் இல்லாத மச்சினனைப் பிள்ளை போல ஆதரிச்சு வளர்க் கிறதை விட்டுட்டு – அவன் போக்கிலே விட்டே. படிக்காது ஊர் சுத்தித் திரிஞ்சவனை அடக்கிப் பொறுப்பானவனாக ஆக்க உனக்குப் பொழுது இருக்கலை; மனமும் இருக்கலை. கையாடிவிட்ட குற்றத்துக்காகச் சிறைவாசம் அனுபவிச்சுட்டு வீட்டுக்குச் சித்தப்பா திரும்பினபோது எப்படிப் பேசினே? – அப்போ நான் சின்னக் குழந்தைதான். இருந்தாலும் நன்னா நினைவிருக்கே? சித்தப்பா சாப்பிடும்போதும் உட்கார்ந் திருந்தபோதும் வார்த்தைகளால் சுட்டுக்கரிச்சு கொட்டினே. அதைத் தாங்க முடியாமல் அவர் பெட்டியைத் தூக்கிண்டு வெளியே போனப்போ நீயும் அப்பாவும் இடிச்ச புளியாட்டம் அசையாம பார்த்துண்டு இருந்தேளே. அதை மறக்க முடியுமா? சித்தப்பான்னு அழுதுண்டு ஓடின என்னைப் பிடிச்சு இழுத்துக் கொண்டு வந்து பேயாட்டம் முதுகிலே அறைஞ்சியே அதை, நான் மறக்கவேயில்லையம்மா. நீ ரொம்ப சுய நலக்காரி – உன் கணவன் – உன் குழந்தைகள்... நீ – மட்டும் சுகமா வாழ்ந்தால் போதும் – இது நியாயமே இல்லை – தெரிஞ்சுக்கோ. அம்மா!' கூச்சலிட்டு உரக்கப் பேச வேண்டும் போல உணர்வுகள் உள்ளத்தில் பொங்கிப் புரண்டன. பற்களை அழுத்தமாகக் கடித்துக் கொண்டு படுத்துக் கிடந்தேன்.



மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. அலுவலகத்திற்கு விழுந் தடித்துக் கொண்டு ஓட வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கவில்லை.

''காலில் சக்கரம் கட்டிண்டு எங்கே புறப்பட்டுட்டே... மாப்பிள்ளை வீட்டில் இருக்கும்போது எங்கே கிளம்பினே?'' அம்மா அடிக்குரலில் அதட்டினாள்.

''என் சிநேகிதி வீட்டுக்கு...'' பிடிவாதமாகப் புறப்பட்டு விட்டேன். தோளுக்கு மிஞ்சி வளர்ந்து வேலைக்குப் போகிற பெண் நான். அம்மாவால் அதற்கு மேல் அதிகாரம் செய்ய இயலவில்லை.

பஸ் நிலையத்திலிருந்து லோகநாதன் தெருவைத் தேடிக் கொண்டு மெல்ல நடந்தேன். நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. தெரு முனையிலிருந்த ஹோட்டலில் காலை வேளை கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. கல்லாப் பெட்டியருகே நெருங்கி... அதன் பின்னாலிருந்தவ ரிடம் மெல்லிய குரலில் கேட்டேன்.

''யாரது? சுந்தர் என்கிறவரா?... மூணு நாளா வேலைக்கு வரலையம்மா! உடம்புக்கு முடியாம வீட்டில் இருக் காராம்...'' கல்லாப் பெட்டிக்காரர் காரமாகச் சொன்னார். பகீர் என்ற உணர்வுடன் நான் தெருவில் இறங்கி நடந்தேன்.

குருவிக் கதையைச் சொல்லிக் கொண்டு என்னைத் தோளில் சுமந்தபடி மீனாட்சி கோவிலுக்கு அழைத்துச் சென்ற சித்தப்பாவை பரிவுடன் மனம் நினைத்தது; கண்கள் பனித்தன.

அப்பா சொன்ன குமாரசாமியின் வீட்டு எண்ணைத் தேடிக் கண்டுபிடித்து... எதிர்பக்கம் திரும்பிப் பார்த்தேன். சித்தப்பா தங்கியிருக்கும் பழைய வீடு தென்பட்டது. துணி வுடன் கதவைத் தட்டினேன்.

''சுந்தர் ஐயாவைப் பார்க்கணுமா? வாசல் பக்கம் மாடிப் படி இருக்கே!'' கதவைப் பட்டென்று சாத்திக் கொண்டாள் வீட்டுக்காரி.

ஒரே மூச்சில் படியேறி மூடியிருந்த அறைக் கதவை மெல்லத் தட்டினேன். யுகமாகி விட்டது போன்ற தவிப்பில் நின்று கொண்டிருந்தேன். பாதி நரைத்துப் போன மீசையும் தாடியுமாக ஓர் ஆசாமி கதவைத் திறந்துவிட்டு வியப்போடு என்னைப் பார்த்தார்.

கசங்கிப்போன அழுக்கு லுங்கியிலும் கிழிந்த பனியனிலும் தெரிந்த அந்த வயதான மனிதர் என்னைக் கண்டு வெட்கியவர் போல, சட்டென்று பாயின் ஓரத்தில் கிடந்த துண்டை எடுத்து மார்பைப் போர்த்திக் கொண்டார்.

''நீங்க யாரனு?'' கண்களை இடுக்கியபடி என்னை மீண்டும் வியப்போடு பார்த்தார்.

''என்னைத் தெரியலையா சித்தப்பா? உங்க குட்டி பெண் சியாமளி...'' சொல்லி முடிப்பதற்குள் அழுகையால் வார்த்தைகள் குழறின.

''சியாமளா குட்டியா? என்ன அதிசயம்! உயரமா அழகா... இத்தனை பெரியவளா வளர்ந்துட்டியே!'' நடுங்கிய படி நீட்டிய அவரது கரங்களை நான் ஆவலுடன் பற்றிக் கொண்டேன்.

''சித்தப்பா! நாங்கள்ளாம் இருக்கச்சே இப்படி அநாதையா பிச்சைக்காரனைப்போல நீங்க ஜுரத்தோட தனியா இருக்கலாமா? சித்தப்பா! உங்க குட்டிப் பெண் இப்போ கை நிறைய சம்பாதிக்கிற ஒரு பாங்க் ஆபீசர், தெரிஞ்சுக்குங்க'' கண்ணீருடன் தடுமாறினேன். மறுபடியும் குழந்தைப் பருவத்து நினைவில் சித்தப்பாவின் மடியில் உட்கார்ந்து மிட்டாய் தின்று கொண்டு சிரித்து மகிழ்ந்த அந்த நாட்கள் நெஞ்சிலே நீண்ட கதைகளைச் சொல்ல — கண்கள் பொல பொலவென்று கண்ணீரைச் சிந்தின.



''உட்காரம்மா...'' உடைந்த முக்காலியொன்றை இழுத்துப் போட்டார் அவர்.

''வாட்டசாட்டமான சித்தப்பா... பளிச்சென்று கண்கள் பளபளக்கச் சிரிக்கும் சித்தப்பா. இப்போ எப்படி கூனிக் குறுகி - வயதுக்கு மீறிய முதுமையில் படுகிழவனாக மாறி விட்டார்?'' வேதனையோடு அவரைப் பார்த்தேன்.

''ஹோட்டலுக்குப் போய் காப்பி வாங்கிண்டு வரேம்மா.'' அலுமினியத் தம்ளர் ஒன்றை எடுத்துக் கொண்டு கிளம்பினவரை நான் தடுத்தேன்.

''சித்தப்பா! மூட்டையைக் கட்டுங்க. உங்களை ஒரு டாக்சியில் வீட்டுக்கு அழைச்சிண்டு போக வந்திருக்கேன்.''

அவர் என்னை ஊடுருவிப் பார்த்தார்.

''எப்படியம்மா முடியும்? எனக்கு என்ன பாத்தியதை இருக்கு?''

''இருக்கு. உங்கம்மா வச்சுட்டுப் போன நகைகளில் உங்க பங்கு இருக்கே. தங்கம் விற்கிற விலையைப் பத்தி உங்களுக்குத் தெரியுமா? கிளம்புங்க சித்தப்பா...'' நான் அன்போடு அதட்டினேன்.

''வேண்டாம்மா. ஒரு தடவை தாண்டின அந்த வாசப் படிக்குள்ளே மறுபடியும் காலை வைக்கிறதில்லைன்னு என் கொள்கை. அது ஒன்றுதான் என்கிட்டே இப்போ இருக்கிற சொத்து. அதையும் உதறச் சொல்றியே, நியாயமா?''

நெஞ்சு துயரத்தில் கனத்தது. பேச முடியாது உதடுகள் துடித்தன.

''சித்தப்பா! நான் உங்களை அடிக்கடி வந்து பார்க்க விரும்பறேன். அதுக்கு ஏதாவது தடை உண்டா? உங்க குட்டிப் பெண் தன் கையால் சம்பாதிச்சதிலிருந்து ஏதாவது கொடுத்தால் ஏத்துக்க மாட்டேளா?'' கேட்டுக் கொண்டே பையைத் திறந்து பத்து ரூபாய் நோட்டொன்றை எடுத்து அருகில் பாய்மீது வைத்தேன். பின்னர் அரை மனத்தோடு விடை பெற்றுக் கொண்டேன்.

அக்கா ஊருக்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள்.

''எங்கேடி போயிட்டு வரே?'' அம்மா இரைந்தாள். நான் அசட்டையாக முறுவலித்தேன்.

அக்கா ஊருக்குக் கிளம்பியதும், அப்பாடா! வீட்டில் எத்தனை ஒரு நிம்மதி!

நாள் முழுவதும் சித்தப்பாவின் நினைவு நெஞ்சை உறுத்திக் கொண்டிருந்தது. வயதான காலத்தில் பாவம் என்று உருகிக் கரைந்தபோது அந்த நினைவு பளிச்சிட்டது.

மறுநாள் வேலைக்குக் கிளம்பியபோது அம்மா அதட்டினாள்.

''காலம் கெட்டுக் கிடக்கு. கல்லுப்போல இருக்கும் பாட்டி சங்கிலியை எடுத்துப் போட்டுக் கொண்டு வேலைக்குப் போகணுமா...''

''ஒரே ஒரு நாள் மட்டும் அனுமதி போறும்... ரொம்ப ஆசையா இருக்கு...'' சொல்லிவிட்டுத் துணிச்சலாகப் புறப் பட்டேன்.



மாலை வேலை முடிந்ததும் நேரே சிந்தாதிரிப் பேட்டைக்கு ஆட்டோவில் கிளம்பி விட்டேன்.

பாட்டியின் சங்கிலியைக் கழற்றி சித்தப்பாவிடம் கொடுத்துவிட வேண்டும். அவர் அதை விற்றுப் பிழைத்துக் கொள்ளட்டும். அம்மாவுக்கு ஏதாவது கதை சொல்லிச் சமாளிக்கலாம். அக்கிரமத்தை அக்கிரமத்தால்தான் ஒடுக்க முடியும்... எண்ணிக் கொண்டே மூச்சிரைக்கப் படிகளைத் தாவி மேலே வந்தபோது திடுக்கிட்டுப் போனேன். சித்தப்பா வசித்த அறையின் கதவில் பூட்டுத் தொங்கியது.

''சுந்தர் என்பவரையா கேட்கிறே? முந்தா நாள் ராத்திரி காலி பண்ணிக் கொண்டு போயிட்டார். எங்கேயோ, யார் கண்டா...?'' முணுமுணுத்தாள் வீட்டுக்காரி.

சித்தப்பாவைக் குறித்து தகவல் ஏதாவது கிடைக்குமா என்றறிய, அவர் வேலை பார்த்து வந்த ஹோட்டலுக்குப் போனேன்.

ஹோட்டலில் கல்லாப் பொட்டியருகிலிருந்த மனிதரின் முகத்திலே கடுமை தெரிந்தது.

''சுந்தரைத்தானே தேடிக் கொண்டு வந்தீங்க. இந்த கடுதாசியைக் கொடுக்கச் சொன்னார்.'' அசட்டையாக கடித உறையை நீட்டினார்.

கையும் காலும் பதற, நெஞ்சு துடிதுடிக்க உறையை பிரித்துக் கடிதத்தை எடுத்து பாதையோரத்தில் நின்றபடி படித்தேன்.

'அன்புள்ள சியாமளி குட்டிக்கு அநேக ஆசிகள்.

நீங்கள் சென்னைக்கு வந்திருப்பது தெரிந்ததும் ஒரே ஒரு முறையாவது உன்னைப் பார்த்துப் பேசணும்னு துடிச்சிண்டு

இருந்தேன். அந்த பாக்கியம் எனக்கு வலுவில் கிடைச்சதைப்பற்றி ரொம்ப ஆனந்தப்படறேன். படிச்சிருந்தும் – பெரிய வேலையி லிருந்தும் – ஏழை சித்தப்பா மேலே உனக்கு இருக்கிற பாசத்தை நினைச்சு நான் ரொம்ப நெகிழ்ந்து போயிட்டேன். என்னால் உன் வருங்காலம் எந்த விதமாகவும் பாதிக்கப்படக் கூடாது என்கிற கொள்கைக்காக நான் இந்த ஊரைவிட்டே போகிறேன். மறுபடி நாம் சந்திப்பது துர்லபம். ஏன்னா, இந்த சித்தப்பாவை வயசும் வியாதியும் பாதிச்சுண்டு இருக்கு. என் பங்குக்கு உன் பாட்டி வச்சுட்டுப் போன நகைகளை ஆசையோட, மனப்பூர்வமா உனக்கு என்னுடைய கல்யாணப் பரிசாக நான் கொடுக்கிறேன். எடுத்துக்கோ... சித்தப்பாவின் ஞாபகம் இருக்கட்டும். அது போதும்...

— சுந்தர்.

கண்கள் குளமாக, நெஞ்சு துயரத்தில் சுமையாக, கால்கள் தடுமாற நடக்கிறேன். அம்மாவுக்கு முன் சித்தப்பா எப்படி உயர்ந்து விட்டிருக்கிறார்!

'நியாயங்கள் சுயநலத்தின் முன்னால் மாறும்போது உண்மையை உணர்கிறவர்கள் எங்களைப் போன்ற இளைஞர்கள் தான் சித்தப்பா! அம்மாவுக்கு உங்களைப் புரிந்து கொள்கிற சக்தி கிடையாது...'

கன்னங்களில் நீர் கோடிட எனக்குள் சொல்லிக் கொண்டு நடக்கிறேன் நான்.

★ ★ ★